I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.40/2022 நாள் : 14.03.2025 வா.சா.1– திரு. பாக்கியநாதன்.</u>

**முதல் விசாரணை :–**

நான் வாதி அறக்கட்டளையில் நான் மேலாண்மை அறக்கட்டளைதாரராக இருந்து வருகிறேன். 20.06.2016 அன்று 1ம் பிரதிவாதிக்கு எங்கள் அறக்கட்டளை எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ 1**. 19.12.2017–ல் பிரதிவாதி வாதியின் மகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரம் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ 2**. 08.01.2018–ல் பிரதிவாதி வாதியின் மகனுக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரம் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ 3.** பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீது நகல் **வா.சா.ஆ 4**. அதை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.5**. 28.01.2022 தேதியில் வாதி சாத்தான்குளம் வட்டாட்சியர் அவர்களிடம் கொடுத்த மனு அஞ்சலக ஒப்புதல் அட்டை நகல் **வா.சா.ஆ 6**. 28.01.2022 தேதியில் வாதி சாத்தான்குளம் சார்பதிவக அலுவலகத்தில் கொடுத்த தடங்கல் மனு நகல் **வா.சா.ஆ 7**. சாத்தான்குளம் சார்பதிவாளர் வாதிக்கு கொடுத்த எழுத்துமூல விளக்கம் அசல் **வா.சா.ஆ 8**. 11.02.2022 வாதி தட்டார்மடம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் **வா.சா.ஆ 9**. 11.02.2022 தேதியில் வாதி கொடுத்த புகாருக்கு காவல்நிலையத்திலிருந்து வழங்கப்பட்ட சிஎஸ்ஆர் அசல் **வா.சா.ஆ 10**. 12.02.2022 வாதி தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு நகல் **வா.சா.ஆ 11**. மேற்படி புகார் மனுவிற்கு தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கொடுத்த ரசீது அசல் **வா.சா.ஆ 12**. வாதி தென்மண்டல காவல்துறை தலைவர் அவர்களக்கு அனுப்பிய புகார் மனு நகல் **வா.சா.ஆ 13**. அந்த புகார் மனு பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக

ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ 14**. 12.02.2022 தேதியில் வாதி காவல்துறை துணைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு நகல் **வா.சா.ஆ 15**. மேற்படி புகார் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ 16**. அறக்கட்டளை நிறுவனத்திற்குரிய 5/2014 எண்ணிட்ட ஆவணம் நகல் **வா.சா.ஆ 17**. மேற்படி அறக்கட்டளை நிறுவனத்திற்குரிய 10/2013 எண்ணிட்ட சீர்திருத்த ஆவணம் நகல் **வா.சா.ஆ 18**. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.03.14 18:41:51 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.